**தலைப்பு 294 - தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 294 - தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஒக்தோபர் 03 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பித்தலிற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 884.91 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அதில் ரூபா 797.61 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா 87.30 மில்லியன் அதாவது 9.86 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 345.21 | 344.21 | 1.00 | 0.29 |
| மூலதனம் | 539.70 | 453.40 | 86.30 | 15.99 |
| **மொத்தம்** | **884.91** | **797.61** | **87.30** | **9.86** |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 29401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 16.00 | 15.93 | 11.00 | 13.94 | 70.00 | 46.88 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0146/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6.45 மில்லியனாகும்.

**2.4 பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் கீழுள்ள 03 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 72.30 மில்லியனாகும். விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0125/000 | 7.23 |
| 6000/0000/00/0016/0074/000 | 63.63 |
| 6000/0000/00/0018/0081/000 | 1.44 |
| **மொத்தம்** | **72.30** |

மிருகக்காட்சிச்சாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தால் 36 ஒப்பந்தங்களிற்குரிய வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 34,978,798 தொகை பொது வைப்புக் கணக்கின் மேற்படி மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டுத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம்முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| மின்சார உபகரணங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்கான மூலதன செலவினத்தின் கீழ் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 539.70 மில்லியன் நிதியேற்பாடுகளில் ரூபா 453.40 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 86.30 மில்லியன் அதாவது அதற்கான நிதியேற்பாடுகளில் 16 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 3 செலவின விடயங்களிற்காக மேலதிக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக நிதியேற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் ரூபா 85,294,303 சேமிக்கப்பட்டிருந்ததுடன் இது அச்செலவின விடயங்களிற்குரிய தேறிய நிதியேற்பாடுகளில் 35 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சளவில் காணப்பட்டன.

(இ) 2015 திசெம்பர் 29 ஆம் திகதிய 07/2015 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் (2) ஆம் பிரிவின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செலவின விடயக் குறியீடு 1202 – எரிபொருளில் 15 சதவீதம் கட்டாயம் சேமிக்கப்பட வேண்டிய

போதிலும் திணைக்களம் உரிய செலவின விடயக் குறியீட்டின் கீழ் 2 சதவீதத்தை மாத்திரம் சேமித்திருந்தது.

**3.3 பொது வைப்புக் கணக்கு**

2 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 18,805,522 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

29401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 3,247,427 ஆக இருந்ததுடன் அவை 01 ஆண்டு முதல் 20 ஆண்டுகள் வரையான காலவீச்சிலிருந்த போதிலும், அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலையிலிருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறந்த மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 1,504,210 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 407,524 மீதியொன்று 10 வருடங்களிற்கு மேலாக காணப்பட்டதுடன் 05 ஆண்டுகளிற்கு மேலாக ரூபா 95,955 மீதி காணப்பட்டது. மீளாய்வாண்டினுள் அப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் முற்பண மீதி ரூபா 1,097,659 ஆக இருந்ததுடன் அதில் 10 வருடங்களிற்கு மேலாக ரூபா 250,410 கடன் மீதியொன்றும் 05 வருடங்களிற்கு மேலாக ரூபா 402,714 தொகையும் காணப்பட்டன. அக் கடன் மீதிகளை மீளாய்வாண்டினுள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பதவி வறிதாக்கப்பட்ட 10 உத்தியோகத்தர்களிற்குரிய ரூபா 367,550 மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் 10 வருடங்களிற்கு மேலாக ரூபா 123,095 மீதியொன்றும் 05 வருடங்களிற்கு மேலாக ரூபா 4,350 மீதியும் காணப்பட்டன. அம்மீதிகளை ஆண்டினுள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்றோ அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டோ காணப்பட்டதுடன் அவற்றின் பெறுமதிகள் மற்றும் விளைவற்ற

மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | சொத்துக்களின் வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| (i) | அலுவலக உபகரணங்கள் | 58 |
| (ii) | தளபாடம் மற்றும் உபகரணங்கள் | 33 |
| (iii) | கணனி மற்றும் உபபாகங்கள் | 15 |
| (iv) | ஏனைய சொத்துக்கள் | 310 |

**(ஆ) வருடாந்தப் பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2015 ஆம் ஆண்டிற்குரிய கணக்கெடுப்புச் சபை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த சில பிரிவுகளிலுள்ள மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 771 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

மீளாய்வாண்டின் போது நிதிப்பிரமாணம் 94(1) இன் ஏற்பாடுகளிற்கு முரணாக 09 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட தேறிய நிதியேற்பாட்டை விஞ்சி ரூபா 2.74 மில்லியன் கூட்டுத்தொகையான பொறுப்புக்களிற்கு கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 3.6 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| | XIX ஆம் அத்தியாயத்தின் 8.2 ஆம் பிரிவு | விடுதிகளின் பராமரிப்பிற்கு பொறுப்பான உத்தியோகத்தரால் அரசாங்கத்தின் அட்டவணைப்படுத்தப்பட்ட அல்லது அரசாங்க சேவை விடுதிகளிற்காக தனித்தனியாக பொருளிருப்புக்கள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) | நி.பி. 371(2)(ஆ) | உத்தியோகத்தரால் உரிய நோக்கம் பூர்த்தியடைந்த பின்னர் கட்டுநிதி உடனடியாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் 07 |

| | | |
|---|---|---|
| | | உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 367,800 செயல்நிமித்தக் கட்டுநிதிகள் 01 மாதம் முதல் 11 மாதங்கள் வரையான காலவீச்சில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. |
| (ii) | நி.பி. 454(1) | அரசாங்க களஞ்சியங்களில் ஒவ்வொரு பொருட்களையும் பெறுதல் மற்றும் வழங்குதல் என்பன பொருட்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் குறிப்பிட்ட சில பொருட்கள் பொருட்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்காதமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. |
| (iii) | நி.பி. 751 | பிரதான சிற்றுண்டிச்சாலைக்குச் சொந்தமான எந்தவொரு பொருளும் பொருட்பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நி.பி. 754 | மிருகப் பிரிவின் முன்னைய வருடங்களிற்குரிய பொருட்கள் தொடர்பான எந்தவொரு தகவல்களும் புதிய பொருட்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நி.பி. 757(ஆ) | மாதிரிப் பொருள் சேகரிப்பு பிரிவால் திறைசேரி 66 மாதிரிப்படிவம் பூர்த்தி செய்யப்பட்டு பொருள் கணக்கெடுப்புச் சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.7 உள்ளூர் நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்

செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடுதல், செயற்திட்டத்தை நிறைவேற்றாது கைவிடுதல் மற்றும் செயற்திட்டத் தாமதங்கள் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### (அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடுதல்

திணைக்களத்தால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | ஆரம்பிக்காமைக்கான காரணங்கள் சுருக்கமாக |
|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | | |
| பின்னவல மிருகக்காட்சிச்சாலையின் ஊர்வன பூங்கா | 51.20 | 2016 ஏப்ரல் 01 | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| பின்னவல மிருகக்காட்சிச்சாலையின் நீர்வாழ் பறவைகள் தீவு | 5.0 | 2016 மே 01 | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) செயற்றிட்டத்தை நிறைவேற்றாது கைவிடுதல்**

திணைக்களத்தால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அச்செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படாது கைவிடப்பட்டிருந்தன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2016 திசெம்பர் 31 வரையான செலவினம் | கைவிடப்பட்டமைக்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | | ரூபா. மில்லியன் | |
| பின்னவல மிருகக்காட்சிச்சாலையின் வண்ணாத்துப்பூச்சி பூங்கா மற்றும் கெபியன் மதில் | 8.00 | 2016.09.02 | 1.99 | எதிர்பார்க்கப்பட்ட மட்டம் வரை நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை. |
| பின்னவல மிருகக்காட்சிச்சாலையின் மலசலகூடத் தொகுதி | 42.14 | 2016.08.23 | 8.43 | ஒப்பந்ததாரர் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் வேலையை பூர்த்தி செய்யத் தவறியமை. |

**(இ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

அம்பாந்தோட்டை ரிதியகம சபாரி பூங்காவில் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | பூர்த்தி செய்யப்பட்ட திகதி | 2016 திசெம்பர் 31 வரையான செலவினம் | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | **ரூபா. மில்லியன்** | | | | **ரூபா. மில்லியன்** | |
| கரடி அரணிற்கும் பொங்கால புலி அரணிற்கும் இடையேயான எல்லையில் 16'' உயரமான சங்கிலி இணைப்பு வேலி அமைத்தல் | 27.14 | 2016 நவம்பர் 15 | 2016 திசெம்பர் 06 | 2017 யூலை 30 வரையிலும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 4.17 | உடன்படிக்கை கைச்சாத்திடுவதிலுள்ள தாமதம் மற்றும் ஒப்பந்ததாரரின் வினைத்திறனின்மை |
| யானை அரணுடன் சேர்ந்த ஆசிய வலயத்தின் | 79.60 | 2016 நவம்பர் 30 | 2017 மார்ச் 16 | 2017 யூலை 30 ஆம் திகதி வரையிலும் செயற்திட்டம் | 76.71 | உடன்படிக்கை கைச்சாத்திடுவதிலுள்ள தாமதம் மற்றும் ஒப்பந்ததாரரின் |

| | | |
|---|---|---|
| கிரவல் வீதியை நிர்மாணித்தல் | பூர்த்தி செய்யப்பட்டிருக் கவில்லை | வினைத்திறனின்மை |

**3.8 செயலாற்றல்**

2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

திணைக்களம் பிரதான பணிகளை போதியளவில் நிறைவேற்றாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) தெகிவளை மிருகக்காட்சிச்சாலையின் பிரதான அபிவிருத்தி நடவடிக்கைகள்**

(i) திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 22 மில்லியன் மதிப்பீட்டில் மீளாய்வாண்டில் பூர்த்திசெய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 08 ஆம் இலக்க வீதி மற்றும் அண்மித்த வலயத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய நிர்மாண நடவடிக்கைகளில் 18 சதவீதம் மாத்திரம் ஆண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ii) திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்ட சிம்பன்சி அரண் கட்டம் 01 மற்றும் எல்லைச் சுவர் புதுப்பித்தல் கட்டம் 02 ஆகிய நிர்மாணங்களின் செயன்முன்னேற்றங்கள் முறையே 25 சதவீதம் முதல் 15 சதவீதம் வரையான வீச்சளவில் காணப்பட்டன.

(iii) வருடாந்தச் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் தெகிவளை மிருகக்காட்சிச்சாலையின் பிரதான திட்டத்தின் மொத்த பௌதீக செயன்முன்னேற்றம் 50 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது.

**(ஆ) பின்னவல யானை காப்பகத்தின் பிரதான அபிவிருத்தி நடவடிக்கைகள்**

மீளாய்வாண்டின் திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 08 மில்லியனிற்கு சேவைகளை வழங்கும் வீதியை புதுப்பிப்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 ஆகஸ்ட் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய சேவைளை வழங்கும் வீதியை புதுப்பித்தல் செயற்திட்டம் 2016 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் அத்திகதியிலுள்ளவாறு நிர்மாணித்தலின் செயன்முன்னேற்றம் 60 சதவீதமாக மாத்திரம் இருந்தது.

**(இ) அம்பாந்தோட்டை ரிதியகம சபாரிப் பூங்காவின் பிரதான அபிவிருத்தி நடவடிக்கைகள்**

(i) யானை அரணுடன் சேர்ந்த ஆசிய வலயத்தின் நீர் வழங்கல் மற்றும் வலய எல்லையில் 8' உயரமான சங்கிலி இணைப்பு வேலி அமைத்தல் தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முறையே 20 சதவீதம் மற்றும் 35 சதவீதம் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ii) திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 12 மில்லியனிற்கு பூர்த்திசெய்யப்படுவதற்கு மதிப்பிடப்பட்டிருந்த பதவிநிலை உத்தியோகத்தர்களிற்கான உத்தியோகபூர்வ விடுதிகளை நிர்மாணித்தல் தொடர்பில் 20 சதவீத நிர்மாணம் மாத்திரம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் இந்த நிர்மாணம் தொடர்பாக ஒப்பந்தம் வழங்கப்பட்ட கட்டிடங்கள் திணைக்களத்துடன் இணங்கப்பட்டிருந்த ஒப்பந்தத் தொகை ரூபா 58,993,620 (பெறுமதி சேர் வரி மற்றும் நிகழத்தக்கபொறுப்புக்கள் தவிர) ஆகும்.

(iii) மீளாய்வாண்டின் திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத யானை அரணுடன் சேர்ந்த ஆசிய வலயத்தின் கிரவல் வீதி நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் ஒப்பந்தம் ரூபா 70,602,876 (பெறுமதி சேர் வரி மற்றும் நிகழத்தக்கபொறுப்புக்கள் தவிர) தொகைக்கு தேசிய இயந்திரவியல் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

(iv) 2016 திசெம்பர் 06 அளவில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய பொங்கால புலி வலயத்தில் 04 எல்லை வேலிகள் அமைத்தல் தொடர்பாக முறையே 75 சதவீதம், 50 சதவீதம், 60 சதவீதம் மற்றும் 65 சதவீத அளவுகளில் மாத்திரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(v) மீளாய்வாண்டின் திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டினுள் ரூபா 88.13 மில்லியன் மதிப்பீட்டின் மூலம் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்ட 13 பிரதான அபிவிருத்தி செயற்திட்ட நடவடிக்கைகள் உடன்படிக்கை கைச்சாத்திடுவதிலுள்ள தாமதங்கள் மற்றும் ஒப்பந்ததாரரின் செயற்திறனின்மை காரணமாக 2016 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.9 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்ற விதத்தில் இருந்தன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை நடைமுறைகளைப் பின்பற்றாமை**

2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3.4 (ஆ) வழிகாட்டலிற்கு முரணாக மிருகக்ககாட்சிச்சாலையில் முதலை அரணொன்று நிர்மாணிப்பதற்குரிய நிர்மாண நடவடிக்கைகள் மற்றும் திட்டமிடுதல் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல் என்பவற்றிற்கான ஒப்பந்தங்கள் ஒரே நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 68,971,870 செலவிடப்பட்டிருந்தது.

## 3.10 முகாமைத்துவப் பலவீனங்கள்

-----------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2008 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது பின்னவல வாகோல்ல புதிய மிருகக்காட்சிச்சாலைக்காக சுவீகரிப்பதற்கு இனங்காணப்பட்ட 11 ஏக்கர்கள் 02 றூட்கள் 02 பேர்ச்கள் பரப்பளவிலான காணியின் சுவீகரிப்பு நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 2008 ஆம் ஆண்டின் போது பின்னவல மிருகக்காட்சிச்சாலையின் ii ஆம் கட்டத்தின் கீழ் சுவீகரிப்பதற்காக இனங்காணப்பட்டிருந்த ஆற்றின் எதிர்ப்புறப் பிரதேசத்தில் அமைந்துள்ள 79 ஏக்கர்கள் 01 றூட் 27 பேர்ச்கள் பரப்பளவிலான 08 காணித் துண்டுகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதில் 34 ஏக்கர்கள் 01 றூட் 07 பேர்ச்கள் பாப்பளவிலான 03 காணித்துண்டுகள் தொடர்பாக காணி சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேபனைகள் மீதான விசாரணைகளின் பரிந்துரைகள் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் காணி அமைச்சிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. சுவீகரித்தல் நடவடிக்கை நீண்ட காலமாக பலவீனமாக இருந்த துடுவே ஹேன/ கும்புகெவத்த, மஹலன்த பாளு வத்த, மஹலன்த வத்த மற்றும் மெத பித்தற பால/ குடாமடத ஆகிய காணிகளில் அமைந்துள்ள 05 காணித்துண்டுகளை சுவீகரித்தல் நடவடிக்கைககளில் போதுமானளவு செயன்முன்னேற்றம் 2016 திசெம்பர் 31 வரையிலும் காணப்படாதமை அவதானிக்கப்பட்டது.

(iii) 2008 ஆம் ஆண்டின் போது பின்னவல யானை காப்பகம் அமைந்துள்ள காணியை விஸ்தரிப்பதன் அடிப்படையின் கீழ் சுவீகரிக்கப்பட வேண்டிய காணிகளாக இனங்காணப்பட்டிருந்த 07 ஏக்கர்கள் 02 றூட்கள் 15 பேர்ச்கள் பரப்பளவான 12 காணித்துண்டுகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களத்திற்கு 01 ஏக்கர் 03 றூட்கள் 08 பேர்ச்கள் பரப்பளவான 02 காணித்துண்டுகள் மாத்திரம் சுவீகரிக்கப்பட்டிருந்தன. மேலும் 05 ஏக்கர்கள் 03 றூட்கள் 07 பேர்ச்கள் பரப்பளவான 10 காணித்துண்டுகள் சுவீகரிக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் 03 காணித்துண்டுகள் தொடர்பாக காணி சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழுள்ள பரிந்துரைகள் காணி அமைச்சிற்கு 2016 திசெம்பர் 31 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இழப்பீடு செலுத்தப்பட வேண்டியிருந்த 02 றூட்கள் 03 பேர்ச்கள் பரப்பளவான 02 காணித்துண்டுகளிற்காக இழப்பீடு செலுத்தப்பட்டிருக்கவில்லை. சுவீகரிக்கப்பட வேண்டிய ஏனைய காணித்துண்டுகளை சுவீகரித்தல் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய செயன்முன்னேற்றத்தை 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடைவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 3.11 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறுள்ளது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 29 | 22 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 185 | 133 | 52 |
| (iv) | ஆரம்ப நிலை | 646 | 474 | 172 |
| | மொத்தம் | **862** | **630** | **232** |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காணப்பட்ட 232 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அவ்வெற்றிடங்களில் அதிகளவிலானவை கால்நடைகளை பாதுகாத்தல், கால்நடைகளின் சுகாதாரம், போசாக்கு மற்றும் கால்நடைக் கட்டுப்பாடு தொடர்பான பதவிகளுடன் நேரடியாக தொடர்புபடும் வெற்றிடங்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.